# இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பௌதீகரீதியாகக் காணப்படாத ரூபா 985,925 கிரயமான நிலையான சொத்துக்களின் 07 விடயங்கள் நிலையான சொத்துக்களாகக் கணக்குவைக்கப்பட்டிருந்த அதேவேளை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாத இச்சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,370 பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 7,000,000 தொகையான வைப்புக்களுக்காகக் கிடைத்த முதலீட்டு வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.
இந்த வட்டி வருமானத்தினை கட்டுப்பாட்டுக் கணக்கில் வைப்புச் செய்வதன் மூலம் வினைதிறனாகப் பயன்படுத்த முடியாதிருந்ததனால் உரிய வட்டி வருமானத்தினை திரண்ட நிதியத்திற்கு செலவுவைத்து மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளுக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது என பணிப்பாளர் நாயகம் எனக்குத் தெரிவித்துள்ளார்.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 635,271 கூட்டுமொத்தமான நடைமுறைச் சொத்துக்களின் 13 விடயங்களின் மீதி 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக பெறவேண்டிய மீதியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 239,784 கூட்டுமொத்தமான நடைமுறைப் பொறுப்புக்களின் 05 விடயங்கள் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் செலுத்தவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்று |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | நிதியத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் பதிவேடு, மூல ஆவணங்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன. |
| (ஆ) | கடன் நிவாரணச் சபை நிதியம் | 130,328 | விபரமான பட்டோலை மீதிகளை உறுதிப்படுத்தல் என்பன. |
| (இ) | 6 முற்பணக் கணக்குகளுக்குரிய மீதி | 287,378 | விபரமான பட்டோலை மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (ஈ) | இறப்பர் வியாபார இருப்பு பதிவேட்டு | 6,360 | இருப்பு பதிவேடு |
| (உ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 746 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (ஊ) | செலுத்தவேண்டிய முற்பணங்கள் | 22,031 | விபரமான பட்டோலை மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (எ) | ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 17,753 | மீதிகளை உறுதிப்படுத்தல் |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 275,280 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 275,865 ஆக இருந்ததனால் மிகையில் குறைவு ரூபா 585 ஆகும். எவ்வாறாயினும் நிதியத்தின் மொத்த செயற்பாட்டு வருமானம் முதலீட்டு வட்டி வருமானத்தினை மாத்திரம் உள்ளடக்கி இருந்ததுடன் அது ரூபா 301,650 ஆக இருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 நிதியத்தின் செயற்பாட்டு தொடர்பான நிகழ்கால நிலைமை

செயற்பாடற்றுக் காணப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தினை கலைக்கும் வகையில் உரிய அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளில் காட்டப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்து அவற்றிற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அரச நிதித் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த அறிக்கைத் திகதி வரை அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் கீழ் வருடாந்தம் செலவு செய்யப்படாததனால் மீளாய்வாண்டு தொடர்பாக பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல்